அனைவருக்கும் மனித உரிமைகள் :
சமாதான முறைவழியில் சிறுபான்மையினரின் உரிமைகள்

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிறுபான்மையினரின்
உரிமைகள் பற்றிய செயற்றிட்டம்

# மகஞ்சார் சிறுபான்மையினர்

யுரேசா பெர்லாந்து

மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கை.

அனுசரணை : ஐரோப்பிய ஒன்றியம்

ISBN : 955 - 582 - 118 - 6

உள்ளே :

- மதஞ்சார் சிறுபான்மையினர்.

– புரேசா பெர்ணாந்து

# மதஞ்சார் சிறுபான்மையினர்

எழுதியவர் : யூரேஷா பர்னாந்து,

1. மனித உரிமைகள் பேணலுக்கென அனைத்துலக ஆட்சி
2. மத உரிமைகள் தொடர்பான இலங்கையின் தற்பொழுதைய சட்ட நிலை
3. மதஞ்சார் சகிப்பில்லாத்தன்மையுடன் தொடர்புடைய மோதல்களின் வடிவம்
4. மத (மனித) உரிமை பேணலை ஊக்குவித்து நீடித்து நிலைக்கும் வகையிலான தீர்வொன்றினைக் காணும் முயற்சியில் மதக்குழுக்களுக்கிடையே புரிந்துணர்வொன்றினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியம்.

## 1. மனித உரிமை பேணலுக்கென அனைத்துலக ஆட்சி

இரண்டாவது உலக மகா யுத்தம் விட்டுச் சென்ற சாம்பல் மேடு புதிய ஒழுங்கு ஒன்றினை உலகிற்கு வகுத்துக்கொடுத்துள்ளது. எல்லாவற்றிலும் மேலாக மனிதனுக்கு கௌரவமளிக்கும் நியதியொன்றினை உலகிற்கு வழங்கியுள்ளது. போருக்கு காரணமாயிருந்த இன மற்றும் கலாசார வேறுபாடுகள் எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு நியதியை எமக்கு அளித்துவிட்டுச் சென்றுள்ளது. கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்குமிடையே காலங்காலமாக நிலவி வந்த சகிப்பில்லாத்தன்மையையும் தாக்கவேண்டும் எனும் உணர்வும் வரலாறு காணாத வகையில் மூர்க்கததனமான மனிதப் படுகொலைகள் பெருமளவில் இடம் பெறக் காரணமாகின. இன அழிப்பின் ஒரு வடிவமாக ஜேர்மனியில் யூதர்களை மூர்க்கத்தனமாக அழித்த படுகொலைகளுடன் ஆரம்பமான பயங்கரவாத யுகம் மதக் கோட்பாடுகளிலுள்ள அடிப்படை வேற்றுமையின் தெள்ளிய வெளிப்பாடே. இச் சந்தர்ப்பத்தில் மதத்திற்கும் நம்பிக்கைக்கும் இடையில் உள்ள வேற்றுமையை அறிய வேண்டியமை அவசியமாகிறது. ஓரே மாதிரியான நம்பிக்கைக்கும் ஒருவனே தேவன் எனும் கோட்பாட்டின்

அடிப்படையில் வணங்குபவர்களுக்கும் இடையேயான அவர்களது சித்தாந்தங்களின் மேலெழுந்தவாரியான வேறுபாடுகளைச் சகித்துக்கொள்ள முடியா நிலையும் இத்துணை மிலேச்சத்தனமான மனிதப் படுகொலைகள் இடம்பெறக் காரணமாகினவென்பதை எண்ணிப் பார்க்கவே முடியாதுள்ளது.

மனித வரலாற்றில் இடம்பெற்ற இரத்தம் பெருக்கெடுத்தோடிய போர்களிற் சில வேறுபட்ட நம்பிக்கைகள் காரணமாக எழுந்துள்ளன வென்பதை அறியக் கூடியதாயுள்ளது. இவை மதப்பற்றுக் காரணமாகவே மூர்க்கம் அடைந்துள்ளன. மதங்களின் தோற்றத்திற்கு காரணமாக இருந்தவர்கள் குறிப்பிட்ட மதங்களைப் பினபற்றுபவர்கள் விலக்கிக்கொள்ள வேண்டுமெனக் குறிப்பிட்ட தீய பழக்கங்கள்' தீவிர மதப்பற்றுக் காரணமாக எழுகின்றன. இந்த உண்மையை இன்றும் எடுத்துக் கூறும் சம்பவங்களாக புனித நிலப்பகுதியை மீளப் பெற கிறிஸ்தவர்கள் மேற்கொண்ட குறுச்சேட் போரிலிருந்து யூத மதத்தில் நம்பிக்கை கொண்டோரை அழிக்க எடுக்க நடவடிக்கை வரையிலானவற்றைக் குறிப்பிடலாம்.

இதே போன்றே மனித உரிமைகளை உறுதிப்படுத்தும் போராட்டங்களும் அவற்றினைத் தொடர்ந்து உரிமைக் கோரிக்கைகளும் மதஞ்சார் உரிமைகளை பேணும் முயற்சிகளும் வரலாறு காலம் தொட்டு இடம் பெற்று வந்துள்ளன.

வரலாறு காலம் தொட்டு இனம் மற்றும் மதம் முதலானவற்றின் பெயரால் பெரும் தொகையானோர் வெறுப்பிற்கும் மோதலுக்கும் இலக்காகியுள்ளதன் விளைவாகவும் அனைத்துலக அளவில் மனித உரிமைகளுக்கான கோரிக்கைகள் எழத் தொடங்கியதைத் தொடர்ந்தும் 20 ம் நுற்றாண்டின் பிற்பகுதியில் இம்மனித உரிமைகளின் பாதுகாப்பிற்கும் பேணலுக்குமாக சர்வதேச ஆழுமையொன்று உருவாக்கப்பட்டது. இந்த மாதிரியான வளர்ச்சி ஏற்பட்டிருந்த போதிலும் மதச் சமத்துவத்திற்கான போராட்டம் உலகின் பெரும்பாலான பகுதிகளில் தொடர்ந்தும் இடம் பெற்றுக் கொண்டிருப்பதைக் காணலாம்.

இதே காலப்பகுதியில் தோற்றமெடுக்கத் தொடங்கிய புதிய உலகத்தையும் பல்லின சமூகங்களையுந் தொடர்ந்து மத சமத்துவத்துக்கான போராட்டங்கள். பிரதானமாக உள்நாட்டளவில் தற்பொழுது இடம் பெற்று வருவதை காணலாம். மதச் சிறுபான்மையினர் தொடர்பான விவகாரம், இரு வகையிலானவையாகும். இந்த விவகாரம் பெரும்பான்மையினர் பின்பற்றும் மதக் கோட்பாடுகளுக்காக பாரம்பரியமாக நிலவி வந்த மதங்களை முற்றாக ஒதுக்கி வைக்கும் நாடுகளுடன் சம்மந்தப்பட்டதுமல்லாமல் சட்டங்கள் அல்லது அரச கொள்கைகள் முதலானவற்றினூடாக குறிப்பிட்டதொரு மதத்தின் மேல் உள்ள பற்றை வெளிப்படுத்தும் தேசங்களுடன் தொடர்புடையது. இதன் ஓர் எடுத்துக்காட்டாக ஈரான் நாட்டைக்[2] குறிப்பிடலாம்.

அரசியலமைப்பின் மூலம் கூட தேவாலயங்களை அரசிமிடருந்து வேறுபடுத்திக் காட்டும் மதச்சார்பின்மையிலான ஆட்சியமைப்பாகக் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதில் உறுதியாகவுள்ள ''நவீன தேசம்'' கொள்கையளவில் அந்நாட்டிலிலுள்ள பல்வேறு மதங்களையும் ஓரங்கட்டி வைப்பதைப் போலவே வெளியாருக்குத் தோற்றும். எனினும் முன்னர் சமர்ப்பித்த உப குழுவின் அறிக்கையொன்றில் ஐநா சபையின் சிறப்பு ஆணையானர் கிருஸ்ணசாமி பிரிவினையெனும் தள நியமத்தின் (Principle) அமைப்பொழுங்கின் கீழ், சிலவேளைகளில், குறிப்பிட்டதொரு மதத்தினால் சாதிக்கப்பட்ட உண்மையான மேன்நிலை அடிப்படையில் அது நாட்டிலிலுள்ள அனைவருக்கும் ஒரே மாதிரியாகத் தான் இருந்தாலும் சில முக்கிய விடயங்களில் பெரும்பான்மையாக உள்ள குழுவின்[3] எண்ணக் கருக்களில் பிரதிபலிக்கின்றது" எனும் கருத்தை வெளியிட்டுள்ளார். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இனம் என்றால் அதிகமானதோர் பின்பற்றும் மதத்தைக் கொண்டு கணிக்கப்படுகிறது. இலங்கையின் சிங்கள பௌத்தர்களை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். மதச் சிறுபான்மையினின் உரிமைகளைப் பேணுவதிலிலும் சிறப்பாக பேணுவதை ஊக்குவிப்பதிலும் பற்றுறுதி காட்டும் அனைத்துலக மட்டத்திலான ஆட்சியொன்றின் உருவாக்கத்தை நாம் மேலும் தாமதித்தல் கூடாது.

மதச்சுதந்திரம் மற்றும் நம்பிக்கைச் சுதந்திரம் அதிலும் சிறப்பாக மத ரீதியான சிறுபான்மையினரின் அடையாளத்தை பாதுகாப்பதற்கும் அடையாளம் காண்பதை ஊக்கமளிப்பதற்குமென உருவாயின. உருவாக்கப்பட்ட பல வெளிப்படுத்துகைகளுக்கும் உடன்படிக்கைகளுக்கும் ஒரு முன்னோடியாக இதனைக் குறிப்பிடலாம். பல்வேறு மதங்களடங்கிய சமூகத்தில் சனநாயக அமைப்புக்களை நிறுவுவதையும் முகாமைத்துவம் செய்வதையும் நோக்காகக் கொண்ட சூழ்நிலைக்கு ஏற்றதான கொள்கைத் தெரிவுகளை விருத்தி செய்வதற்கான தராதரத்திலான அமைப்பொழுங்கினை அவை வழங்கின.[4]

அனைத்துலக மனித உரிமைகள் சட்டத்தின் அடிப்படையிலான குழுவினுட்பட்டதாக குடிநிலை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான அனைத்துலக உடன்பாட்டினை முதன்மைச் சாதனங்களுள் ஒன்றாகக் குறிப்பிடலாம். இவ் உடன்பாட்டின் உறுப்புரைகள் 27 ஐயும் 18 ஐயும் சிறப்பாக குறிப்பிடலாம். இன மத மொழிவாரிச் சிறுபான்மையினரது உரிமைகள் பேணலைக் குறிக்கும் ஒன்றாக உறுப்புரை 7 உள்ளதுடன், சிந்திக்கும் சுதந்திரம், மதச் சுதந்திரம் முதலானவற்றின் பாதுகாப்பிற்கான உறுப்புரையாக 18 விளங்குகிறது. இவை இரண்டும் நாட்டுக் குடிகளுக்கு இவ்வுரிமை சென்றடைவதை உறுதிப்படுத்தும் கடப்பாட்டினை வெளிப்படுத்துகையை ஏற்றுள்ள அரசுகள் மீது விதிக்கிறது. சகல மக்களினது அல்லது உரிமைகளினது கடைப்பிடித்தலின் போது எந்த விதமான மீறல்களுக்கோ அன்றி குறித்த மதங்களைப் பின்பற்றுபவர்கள் எவ்வித ஓரங்காட்டுகைக்கோ[5] உள்ளாகாதிருப்பதை உறுதி செய்வதற்காக சம்பந்தப்பட்ட அரசுகளால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை மதிப்பிடும் உரிமை செயற் குழுக்களுக்கு உண்டு.

இவற்றிற்கு மேலாக சிந்திக்கும், மனச்சாட்சிக்குச் சரியெனப் பட்டதைச் செய்யும் விரும்பிய மதத்தை மற்றும் நம்பிக்கையை பின்பற்றும் உரிமை அனைத்துலக மனித உரிமைகளுக்கான சட்டத்தினால் பெருமளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றின் பாதுகாப்பிற்கென ஐநா சபையினாலும், பிராந்திய மட்டத்திலான

மற்றும் ஏனைய வகையிலுமான அமைப்புக்களினாலும் சிறப்பு ஒழுங்குகள் பிரகடனஞ் செய்யப்பட்டுள்ளன.

இதன் ஒரு எடுத்துக்காட்டாக ஐநா பொதுச்சபையினால் டிசெம்பர் 1992ல் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய அல்லது இன மத, மற்றும் மொழிசார் சிறுபான்மையினரது உரிமைகள் தொடர்பான வெளிப்படுத்துகையைக் குறிப்பிடலாம். இவ் வெளிப்படுத்துகையின் முகப்புரையில் வெளிப்படுத்துகைக்கான உந்துகையாக அமைந்தது குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உடன்பாட்டின் உறுப்புரை 27 னைக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ் உரிமைகள் தொடர்பான சகல முக்கிய ஐ நா வெளிப்படுத்துகைகளும் உடன்பாடுகளுமடங்கிய பட்டியல் ஒன்றினைக் கீழே காணலாம்.

அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் 1948

அகதி அந்தஸ்து தொடர்பான மாநாடு 1951

கல்வியில் ஓரங்காட்டுகைக்கு எதிரான யூனெஸ்கோ (UNESCO) மாநாடு 1960

எல்லா வகை இனம் சார் ஓரங்காட்டுகைகளையும் களைவதற்கான அனைத்துலக மாநாடு 1965

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான அனைத்துலக உடன்பாடு (1966)

வதியும் நாட்டின் குடியுரிமையில்லாதவர்களான தனி நபர்களின் மனித உரிமைகள் தொடர்பான வெளிப்படுத்துகை (1985)

சிறுவர்களது உரிமைகளுக்கான சமவாயம் வெளிநாட்டுத் தொழிலாளர்களும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களதுமான உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான அனைத்துலக சமவாயம் 1990

தேசிய அல்லது இன, மத மற்றும் மொழிசார் சிறுபான்மையின ஆட்களினது உரிமைகள் தொடர்பான வெளிப்படுத்துகை (1992)

இவற்றினை விட மதஞ்சார் சிறுபான்மையினரைக் காப்பதற்கான சர்வதேச ஆட்சியின் கீழ் ஐரோப்பிய கவுன்சில் மற்றும் பாதுகாப்பிற்கும் ஒத்துழைப்பிற்குமான ஐரோப்பிய மாநாடு (CSCE) முதலானவற்றின் அமைப்பொழுங்கிற்குட்பட்ட மத உரிமைகள் தொடர்பான ஐரோப்பிய வெளிப்படுத்துகைகளும் மாநாடுகளும் உள்ளன. தான் விரும்பும் மதத்தையோ நம்பிக்கையையோ பின்பற்றும் உரிமை மற்றும் சிறுபான்மை மதக்குழுக்களைச் சார்ந்தவர்களது உரிமைகள் முதலாயின பல்வேறு வகைப்பட்ட ஒப்பந்தங்களிலும் மாநாடுகளிலும் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் முக்கியமானவையாகக் கீழ்க் காண்பவற்றைக் குறிபிடலாம்:-

மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய சமவாயத்தையும் (1950) 11 ம் இலக்க (1954) முதற் குறிப்பையும் குறிப்பிடலாம்.

ஐரோப்பாவின் பாதுகாப்பிற்கும் ஒத்துழைப்பிற்குமான மாநாட்டின் இறுதிச் சட்டம் (1975)

ஐரோப்பாவின் பாதுகாப்பிற்கும் ஒத்துழைப்பிற்குமான மாநாட்டில் இடம் பெற்ற கூட்டத்தின் இறுதி ஆவணம் 1983

ஐரோப்பாவின் பாதுகாப்பிற்கும் ஒத்துழைப்பிற்குமான வியன்னாவில் இடம் பெற்ற கூட்டத்தின் இறுதி ஆவணம் (1989)

புதிய ஐரோப்பாவிற்கான பாரிஸ் பட்டயம் (1990)

ஐரோப்பாவின் பாதுகாப்பிற்கும் ஒத்துழைபப்பிற்குமான கோப்பன்ஹேகன் கூட்டத்தின் ஆவணம் (1990)

ஐரோப்பாவின் பாதுகாப்பிற்கும் ஒத்துழைப்பிற்குமான ஹெல்சிங்கி உச்சி மாநாட்டின் தீர்மானங்கள் (1992)

மனித உரிமைகளுக்கான உலக மாநாட்டில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட வெளிப்படுத்துகையும் செயற்றிட்டமும் (1993)

தேசிய சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்கான அமைப்பொழுங்கிலான சமவாயம்.

மனித உரிமைகளுடன் தொடர்புடைய அமெரிக்கர்களுக்கு

இடையிலான வெளிப்படுத்துகைகளும், சமவாயங்களும் அமெரிக்க மாநிலங்களால் (OAS) பிரகடனப்படுத்தப்பட்டும் அங்கீகரிக்கப்பட்டும் உள்ளன. இவற்றுள் சில கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:-

மனித உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய அமெரிக்க வெளிப்படுத்துகை (1948)

மனித உரிமைகள் தொடர்பான அமெரிக்க சமவாயம் (1969)

பொருளாதார சமூக மற்றும் கலாசார உரிமைகள் சம்பந்தப்பட்ட துறையின் மனித உரிமைகள் பற்றிய அமெரிக்க சமவாயத்தின் மேலதிக முற்குறிப்பு (1988)

மத உரிமைகள் தொடர்பான கீழே தரப்பட்டுள்ள வகையிலான ஆபிரிக்க வெளிப்படுத்துகைகள் சமவாயங்கள் பலவும் உள்ளன.

மனித மற்றும் மக்கள் உரிமைகள் தொடர்பான ஆபிரிக்க பட்டயம் (1981)

சிறுவர்களின் உரிமைகள் மற்றும் நலன் தொடர்பான ஆபிரிக்க பட்டயம்.

அதிகரித்து வரும் அதீத மதப்பற்றுக் காரணமாகவும் இன மத அடிப்படையிலான இயக்கங்கள் காரணமாகவும் அனைத்துலக மனித உரிமைகள் எனும் வெளித் தோற்றத்தின் கீழும் மதச் சிறுபான்மையினரின் விவகாரம் நாளுக்கு நாள் முக்கியம் பெறத் தொடங்கியது. மத வேற்றுமை உள்நாட்டு தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களிலான சமூக மோதல்களுக்கான பாரிய காரணமாகத் தொடர்ந்து விளங்குகின்றது. ஆகையால் பல்வேறு மத நம்பிக்கையை பின்பற்றுவோரடங்கிய சமூகத்தில் விசேடமாக தேசிய மட்டத்தில் வேற்றுமையில் ஒற்றுமை காணவேண்டியதன் அவசியத்தை சில்லறை விடயமாக எடுக்கக் கூடாது. ஆகையால் அரசுகள் பல்வேறு மதங்களடங்கிய சமூகத்தின் தாற்பரியத்தை கணக்கில் எடுத்து சர்வதேச சட்டநியதிகளின் அடிப்படையிலான கொள்கை வகுத்தற் கலாசார அணுகுமுறையொன்றினை வகுத்துக்கொள்ள வேண்டியமை அவசியமாகிறது.

## 2. மனித உரிமைகள் தொடர்பான இலங்கை சட்டங்களின் தற்போதைய நிலை

இலங்கையின் மதஞ்சார் சிறுபான்மையினர் பற்றிய பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினையாக அனுகும் பொழுது தற்பொழுது நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடுகள், மற்றும் அவை எந்தளவிற்கு அனைத்துலகச் சட்ட நியமங்களுடன் இசைவாக உள்ளனவென்பதையுங் கவனத்துட் கொண்டே அணுக வேண்டும்.

இலங்கையின் மதஞ்சார் சிறுபான்மையினர் தொடர்பான கலந்துரையாடல்களின் போது இந் நாட்டிலுள்ள மூன்று சிறுபான்மை மதங்களுக்கும் பெரும்பான்மை சிங்கள பௌத்தர்களுக்குள்ள அதே கௌரவம் வழங்கப்பட்டுள்ளதாவெனும் பிரச்சினை எழுகின்றது.

இலங்கை அரசியல் யாப்பின் உறுப்புரை 10^வது சிந்திக்கும், மனச்சாட்சிக்கு சரியெனப்பட்டதை செய்யும் மற்றும் தான்விரும்பும் மதத்தையோ அல்லது நம்பிக்கையையோ ஏற்றுக்கொள்ளவோ கடைப்பிடிக்கவோ கூடிய உரிமைகள் உள்ளிட்ட மத உரிமைகளுக்குப் பாதுகாப்பு உள்ளதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதே உரிமை இலங்கையில் பிரதான மதங்களான பௌத்தம் (கத்தோலிக்கமும் ஏனைய சகல பிரிவுகளும் உள்ளடங்கலான) கிறிஸ்தவம், இஸ்லாம் இந்து முதலான சகல மதங்களைப் பின்பற்றுபவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இது குடியியல் அரசியல் உரிமைகளுக்கான அனைத்துலக உடன்பாட்டின் உறுப்புரை 18 ஐ ஒத்ததாக உள்ளது.

குடியியல் அரசியல் உரிமைகளுக்கான அனைத்துலக உடன்பாட்டின் உறுப்புரை 18 ன் ஏற்பாடுகளை உள்ளடக்கியதன் மூலம் மதச் சிறுபான்மையினர் தொடர்பான அனைத்துலக நியமங்கள் ஏற்கப்பட்டுள்ளமை தெளிவாகியுள்ள போதிலும் குடியியல் அரசியல் இன மத மற்றும் மொழிசார் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமெனும் 27 வது உறுப்புரைக்கு அமைய இலங்கையின் சட்டங்களும் அரச கொள்கைகளும்

வகுக்கப்பட்டுள்ளனவாவெனும் கேள்வி எழுகிறது. இலங்கை அரசியல் யாப்பின் 9ஆம் உறுப்புரையில் கீழ்க் காணும் வாசகம் உள்ளது:-

"இலங்கை குடியரசு பௌத்ததிற்கு முதலிடம் வழங்குவதுடன் குறிப்பிட்ட இந்த உறுப்புரைக்கமைய பௌத்த (புத்த) சாசனத்தைப் பாதுகாப்பதும் வளர்ப்பதும் அரசின் கடமையாகவும் அமையும்..."[6]

இவ் உறுப்புரை சமத்துவம் எனும் தள நியமத்தையும் (Principle) மதச்சார்பற்ற அரசெனும் எண்ணக்கருவையும் அப்பட்டமாக மீறுகின்றமை தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. இம்மாதிரியானதொரு ஏற்பாடு அரசியல் யாப்பிற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளமையானது பெரும்பான்மையினரின் கருத்து மேலோங்கியுள்ளமையை வெளிப்படுத்தவதுமல்லாது பௌத்த மதத்தின் அடிப்படைத் தள நியமமான சமத்ததுவக் கோட்பாட்டையும் மீறிய செயலாக அமைந்துள்ளமை பெரும் துர்ப்பாக்கியமே.

தனது பிராந்திய இறைமையைக் கட்டிக் காப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் இலங்கை போன்ற பல்லின பல்வேறு மத நம்பிக்கையுடையோரைக் கொண்டதும் பல்மொழி பேசுவோரடங்கியதுமான ஒரு நாட்டின் அரசியல் யாப்பில் இம்மாதிரியானதோர் ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளதன் தாக்கம் என்னவென்பதை முதலில் முழுமையாக மதிப்பீடு செய்தாக வேண்டும். இன மோதல் புலிகள் இயக்கம் எனும் உருவில் இந்த மாதியானதொரு மோசமான நிலையை அடைவதற்கான காரணம் (ஓரங்காட்டும் அரசியல்) 1956 ம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட அரசகரும மொழிச் சட்டம் மற்றும் 1948 ம் ஆண்டு சட்டமாக்கப்பட்ட குடியுரிமைச் சட்டம் போன்ற ஓரங்கட்டும் அரசியல் காய்நகர்த்தல்கள் மூலம் உருவாகி, உச்ச நிலையை எட்டியுள்ள இழுபறி நிலையின் விளைவேயென்பது குறித்த சில ஆய்வாளர்களின் கருத்து. இனம், மதம், சாதியெனும் அடிப்படையில் சிந்திப்பதை விட்டு தள நியமங்கள் மற்றும் கொள்கைகள் பற்றி

போதுமான அளவு சிந்திக்க இன்னமும் மக்கள் தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ளவில்லையென்பதே 1959 ம் ஆண்டு தேர்தற் தொகுதிகளைச் சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஆணைக்குழுவினது கருத்தாகும்.[7] ஆகையால் 1978ம் ஆண்டு அரசியல் யாப்பின் உறுப்புரை 9ம் இந்த மாதிரியான சிந்தனை காரணமாக எழுந்த இன்னுமொரு வெளிப்பாடே.

மறுபுறம் அரசியல் யாப்பிற்கு கொண்டுவரப்பட்ட இந்த ஏற்பாட்டின் சிக்கல்களையும் தாக்கங்களையும் மதிப்பீடு செய்து கொள்ளும் பொழுது அதனை வாசிப்பதன் விளைவாகக் கிடைக்கும் விளக்கத்தை வெறுமனே ஏற்றுக் கொள்வதை விட்டு கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டதொரு சூழ்நிலையின் அடிப்படையில் அணுகினால் பயனுள்ளதாக இருக்கும். உறுப்புரைக்குத் திருத்தங் கொண்டுவருவதன் மூலம் இதனால் ஏற்பட்டுள்ள இழுபறி நிலையை நிச்சயமாகத் தணித்து விடலாமென்றாலும் எந்த மாதிரியான சந்தர்ப்ப சூழ்நிலைகளில் இதன் பயன்பாடு பொருத்தமாயிருக்கும் என்பதைப் பற்றிய அறிவு அவசியமானதாகும்.

உறுப்புரைகள் 10 லும் 14 (1) (ஈ)[8] யிலும் சகல மதங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை உறுதி செய்யும் அதே வேளை பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பதும் வளர்ப்பதும் நாட்டின் கடமையாக இருக்கும்[9] என உறுப்புரை 9ம் மேலுந் தெரிவிக்கப்பட்டுள்ளதை நாம் கவனத்தில் எடுத்தால் நல்லது. இத்துடன் உறுப்புரை 10 மற்றும் உறுப்புரை 14 (1) (ஈ) முதலான இரண்டிலும் தனி மனிதன் ஒருவனுக்குத் தான் விரும்பும் மதத்தைப் பின்பற்றும் அடிப்படை உரிமையும் சுதந்திரமும் உள்ளதென்பது தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் பௌத்தத்தைப் பாதுகாக்கும் அரசின் மீது தெளிவானதொரு கடமை சுமத்தப்பட்டுள்ள அதே வேளை அக்கடமையை நிறைவு செய்யும் பொழுது ஏனைய மதங்கள் மீது ஓரங்காட்டுகை இடம்பெறாதிருப்பதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பும் அதே அரசிற்கு உள்ளதென்பதும்

தெளிவாகிறது. இதற்கும் மேலாக அரசியல்யாப்பின் உறுப்புரை 12 (2) இன, மத, மொழி முதலானவை காரணமாக எந்தவொரு குடிமகனும் ஓரங்காட்டப்படலாகாதெனத் தெரிவிக்கின்றது. எனினும் "பௌத்த மதத்திற்கு அதி முக்கிய இடம் அளிக்கப்படுவதாக" இருந்தாலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் காரணமாக ஒரு தனி நபருக்குக் கிட்டக்கூடியதான அடிப்படைக் சுதந்திரத்தைப் பாதுகாத்தல் அரசின் முதன்மைக் கடமையெனக் குறிப்பிடப்பட்டுள்ளதன் மூலம் ஏனைய மதங்களையும் பாதுகாக்கும் பேணும் கடமை அரசிற்கும் உண்டென்பது புலனாகிறது.

அரசின் கொள்கை ஓரங்காட்டுகையற்றதாக இருக்க வேண்டுமென்பதில் மறுப்பிற்கு இடமில்லை என்றாலும் பௌத்தத்திற்கு கொடுத்துள்ள முக்கியத்துவம் சமயப்பிரிவுணர்ச்சி உள்ளமையையே வெளிப்படுத்துகிறது. எனினும் பௌத்தத்திற்கு காட்டப்படும் அழுத்தம் ஒப்பற்ற கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் கடமையின் வெளிப்பாடேயன்றி ஏனைய மதங்களுக்கும் மேலாக இன்னுமொரு மதத்திற்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவமாகக் கொளளக் கூடாது. இலங்கையின் கலாச்சாரத்திலிருந்து பிரித்தெடுக்க முடியாத ஒரு அங்கமாக தேரவாத பௌத்தத்தைக் குறிப்பிடலாம். இது அழிந்துபோய்விடக் கூடிய சாத்தியமும் உள்ளது. தேரவாத பௌத்தம் அதன் புராதன வடிவில் தொடர்ந்தும் பேணப்பட்டு வரும் ஒரே நாடும் இலங்கையே.

சகல மதங்களுக்கும் ஒரே மாதிரியான கௌரவமளிக்க வேண்டிய அதே வேளை "பௌத்த மதத்திற்கு முதன்மை இடம்" வழங்கப்படும் எனும் அரசியல்யாப்பிலான ஏற்பாடு அரசுக்குள்ள "புத்த சாசனத்தைப் பேணுவதும் பாதுகாப்பதுமெனும் அரசின் மேல் சுமத்தப்பட்டுள்ள சிறப்புக் கடமையுடன் தொடர்புடையது. சகல மதங்களுக்கும் உரிமைகள் இருக்கின்றமை உறுதி செய்யப்படல் வேண்டுமெனும் 10 மற்றும் 14 (1) (ஈ) இலக்க உறுப்புரைகளில் உள்ள விதிகளுக்கு உட்பட்டதாகவே உறுப்பரை 9 அமைந்துள்ளது. ஆகையால்

அரசின் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பு பண்டைய கலாச்சாரம் ஒன்றின் உள்ளார்ந்த கூறொன்றைப் பாதுகாக்கும் கடமையாகிவிடுகிறது. இக்கடமை பண்டைய இராசதானிகளின் அழிவுகளையோ அல்லது மழை வீழ்ச்சிக்குதவும் காடுகளையோ பாதுகாக்கும் பணிக்கு ஒப்பானதாகும். அழிவுகளும் காடுகளும் உலகப் வரலாற்றுச் சின்னங்களாக இன்றும் கருதப்பட்டு வருகின்றன.

எனினும் இக்கடப்பாட்டை நிறைவேற்றுகையில் ஏனைய மதங்களையும் மதஞ்சார் சிறுபான்மையினரையும் ஓரங்காட்டும் வகையிலான பெருவிருப்புணர்விற்குக் காரணியாக முதன்மை மதம் அமையக் கூடாது. இலங்கையின் சட்டத்துறைக்குள் உள்ள சட்டங்களின் சேர்க்கைக்குள்ளேயே சிறுபான்மை (மதங்களின்) யினரின் நலன்களின் பாதுகாப்பிற்கான சமநிலையையும் பாதுகாப்பையும் உறுதி செய்யும் சில ஒழுங்குகள் உள்ளன.

இலங்கையின் சட்டமுறைமை பல்வகைச் சட்டங்களை கொண்டுள்ளது. றோமன் - டச் சட்டம், ஆங்கிலேய பொதுச்சட்டப் பாரம்பரியங்கள் முதலானவற்றுடன் வெவ்வேறு கலாச்சார மற்றும் மதப் பாரம்பரியங்களையும் அடிப்படையாகக் கொண்ட மூவகை பிரத்தியேகச் சட்டங்களும் உள்ளன. கண்டியச் சட்டமும், தேச வழமைச் சட்டமும் முறையே பௌத்த மற்றும் இந்து மதச் சம்பிரதாயங்களைக் கொண்டனவாக உள்ள அதே வேளை முஸ்லிம் சட்டம் முற்றிலும் இஸ்லாமிய பாரம்பரியத்தையும் குறானையும் அடிப்படையாகக் கொண்ட முழு அளவில் மத ஒழுங்கு பேணும் சட்டமாகும்.

நாட்டின் பொதுச் சட்டத்திற்கும் சிறப்புச் (பிரத்தியேகச்) சட்டத்திற்கும் இடையே முரண்பாடு ஏற்படும் வேளைகளில் பொதுச் சட்டத்திற்கும் மேலான முன்னுரிமை சிறப்புச் சட்டத்திற்கு வழங்கப்படுகிறது.[10]

இவற்றிற்கும் மேலாக மத மற்றும் ஏனைய சிறுபான்மையினரின் உரிமைகள் சட்டரீதியிலான வழிவகைகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளன. நான்கு மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்களால் முன்னின்று செயற்படுத்தப்படும் மத நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் பாதுகாப்பதற்குமென பாராளுமன்றத்தில் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றின் சில எடுத்துக் காட்டுக்களை பௌத்த விகாரை உடைமைகள் கட்டளைச் சட்டம், இங்கிலாந்து திருச்சபைச் கட்டளைச் சட்டம், இந்து கல்விச் சபைச் சட்டம், முஸ்லிம் பள்ளி வாசல்கள் மற்றும் அறஞ்சார் நம்பிக்கைப் பொறுப்புக்கள் அல்லது வக்புச் சட்டம் முதலானவற்றைக் குறிப்பிடலாம்.

தள நியமம் (கோட்பாடு) காரணமாக இருப்பினும் இத்துணை ஒழுங்குகள் நடைமுறையில் இருந்தும் பல்வகை மதங்களைப் பின்பற்றுவோர் வாழும் சமுதாயம் ஒன்றில் சமநிலை பேணாமையும் பிளவும் தொடர்ந்து சகல சமுதாயங்களிலும் நிலவி வருகின்றமை தவிர்க்க முடியாததொன்றாகிவிட்டது. மத உரிமை மறுக்கப்பட்டுள்ளது என்ற உலகம் காரணமாகவே மத உரிமைகள் தொடர்பான பிணக்கு தொடங்குகிறது. இதன் காரணமாக பல்வேறு குழுக்களுக்கும் இடையே உருவாகும் இழுபறி நிலை மதச் சிறுபான்மை விவகாரத்துடன் தொடர்புடைய நடைமுறைச் சிக்கல்களையும் யதார்த்த நிலையையுமே எடுத்துக் காட்டுகின்றது.

## 3. மதஞ்சார் சகிப்பில்லாத் தன்மையுடன் தொடர்புடைய மோதல் வடிவங்கள்

இலங்கையில் பின்பற்றப்படும் பாரிய கீழைத்தேச மதங்களான பௌத்தம், கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் முதலானவற்றிற்குள்ளும் சிங்கள தமிழ் முஸ்லிம் இனக்குழுக்களுக்குள்ளும் நிலவும் சிங்கள தமிழ் மோதல்களைக் கருத்தில் எடுத்தால் "சிங்கள பௌத்தர்" எனும் அடையாளமே விவாதத்திற்குரிய விவகாரமாக நீண்ட காலம் இருந்து வந்துள்ளது. [11]

பல்வேறு மதங்களடங்கிய சமூகமொன்றில் நிலவும் மோதல் நிலைக்கான கருப்பொருள் என்னவென்பதைக் கருத்தில் எடுக்கும்

பொழுது குறிப்பிடத்தக்க இரு வெவ்வேறு வடிவங்களை அவதானிக்கக் கூடியதாயுள்ளது. வெவ்வேறு சமூகங்கள் கலந்து வாழும் ஒரு சமுதாயத்தில் பொதுவாகக் காணக்கூடியதும் ஆய்ந்தறிய வேண்டியதுமான விவகாரமாக ஒரு சமூகம் பிறிதொரு சமூகத்தை ஒதுக்கும் செயற்பாட்டினையும் வன்முறை இடம் பெறுவதையுங் குறிப்பிடலாம். இந்நிலையை பெரும்பாலும் சமூகங்களுக்கிடையேயான இன/மத அடிப்படையிலான முறுகல் நிலையின் போதும் அவதானிக்க முடிகின்றது. இம்மாதிரியான அடக்குமுறை அடடுழியங்கள் திட்டமிட்ட வன்முறைகளாகவோ அல்லது உணர்ச்சி வசப்பட்டுத் தூண்டப்பட்டனவாகவோ இருக்கலாம்.

இலங்கையின் தனிப்பட்ட சச்சரவுகள், சச்சரவுகளுக்குகளுள்ளான தரப்பினரது இன/மத அடையாளங்களை அடிப்படையாகக் கொண்டு இன/மத நெருக்கடியாக உருமாறி உச்சமடைவதை மிக மோசமானதொரு நிலையாகக் குறிப்பிடலாம். மாவனெல்லையில் 2001 ஆண்டு மே மாதம் இடம் பெற்ற சிங்கள முஸ்லிம் கலவரத்தை இதன் ஓர் உன்னத எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். பாராளுமன்ற அரசியல்வாதி ஒருவருக்கும் சாதாரணக் குடிமகன் ஒருவனுக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினை இருவரும் வெவ்வேறு இனத்தவர் என்றதன் காரணமாக இறுதியில் முழு அளவிலான இன/மத மோதலாக உச்சமடைந்திருந்தது. மிக அண்மையில் மாளிகாவத்தையீல் இடம் பெற்ற பாரிய விளைவுகளுக்கு இட்டுச் சென்ற முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்றின் நிர்மாணம் தொடர்பான பிரச்சினை முஸ்லிம்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையே மீண்டும் முறுகல் உருவாகத் காரணமாகியது.

இவற்றினை விட, மதஞ்சார் சிறுபான்மையினரது உரிமை மீறல்கள் இடம் பெறக் கூடிய சாத்தியம் உள்ளதென்பதை ஏற்றுக்கொள்ள வேண்டிய அதே வேளை சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஏதாவதொரு சமூகம் பெரும்பான்மையாக வாழும் பகுதியை வாழ்விடமாகக் கொண்ட பெரும்பான்மைக் குழுவினர்களது

உரிமைகளுக்கும் இதே மாதிரியானதொரு நிலை ஏற்படலாமென்பதும் ஏற்றுக்கொள்ள வேண்டியதொன்றாகும். விசேடமாக வட கிழக்கிலும் எல்லைப் புறக் கிராமங்களிலும் இம்மாதிரியான நிலை நிலவுகின்றதென்பது நாம் அனுபவத்தால் கண்ட உண்மை. இரண்டு பிரதான சிறுபான்மைக் குழுக்களுக்கிடையேயும் இம்மாதிரியான மோதல்கள் இடம் பெறுவதை அவதானிக்கலாம். ஆகஸ்ட் 1990ல் மீறா ஜமீன் பள்ளிவாசலில் தொழுகையில் இருந்த வேளை ஆண்களும் சிறுவர்களுமாக முன்னூறுக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளைக் கொண்ட பெரிய கும்பலொன்றினால் படுகொலை செய்யப்பட்டமையை இதன் ஒரு எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம். இச்சம்பவங்களை பல்வேறு குழுக்களுக்கிடையே நிலவும் மதஞ்சார் சகிப்பில்லாத்தன்மையின் வெளிப்பாடுகளாகக் குறிப்பிடலாம்.

4. நீடித்து நிலைக்கக் கூடிய தீர்வினை காண்பதற்கு உதவியாக மத (மனித) உரிமை பேணலை ஊக்குவித்து மதங்களிடையே புரிந்துணர்வினை ஏற்படுத்திக் கொள்ளவேண்டியதன் அவசியம்.

மேலே தெரிவிக்கப்பட்டுள்ள நிலைமைகள் காரணமாக கலாச்சாரத்திலும் மத அடிப்படையிலும் மேன் நிலையில் இருப்பவர்களிடையே மோதல் நிலை உருவானதைப் போன்றும் மனித இன அடையாளம் சீரழிந்தும் உள்ளாற் போன்ற தோற்றத்தைத் தரும் ஒரு தேசத்திற்கு ஏற்பட்டுள்ள நோயை தீர்ப்பதற்கான ஒரே வழி தீவிர மாற்று நடவடிக்கையேயன்றி வேறெதுவும் இல்லை. இலங்கை உள்ளாக்கப்பட்டிருக்கும் இன்றைய நிலையில் இலங்கையின் நடைமுறைச் சட்டங்களுக்குத் தேவையான திருத்தங்களை எந்தளவிற்கு அரசியல் யாப்பில் மேற்கொண்டாலும் இலங்கை வாழ் மக்களது உணர்வுகளில் மாற்றம் ஏற்படுமாவென்பது சந்தேகத்திற்குரியதே. எமது வரலாற்றின் மகிமை எத்தகையென்பதனை மிகவும் பழமை வாய்ந்ததும் பின்னர் இஸ்லாமிய வழிபாட்டு முறைகளுடனும் கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க

மதங்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளவையுமான பௌத்த இந்து மதங்கள் கட்டியம் கூறும்.

இரு வகைத் தோற்றத்தைத் தருவதும் மக்கள் நலனை குறிக்கோளாக கொண்டதுமான இந்நிலமையைச் சட்டப்படி ஏற்றுக்கொள்ள பாரிய இரு பெரும் சட்டப் பாரம்பரியங்களும், காலங்காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் மூன்று விதமான சட்ட ஒழுங்கு முறைகளும் அவசியமாகின்றன.[12] இம்மாதிரியான பல்லின சமுதாயத்தில் மனித உரிமைகளின் அனைத்துலகக் கோட்பாட்டினை மனிதாபிமானஞ் செறிந்த ஒழுங்கிணைந்த தேசிய கலாச்சாரம் ஒன்றினாற் தான் போற்றி பேண முடியும். இவ்வாறான பல்வகைத் தனிமங்களடங்கிய கூட்டில் பொதுக் கருத்துக்கள் இருக்கின்றமையைக் காண்கிறோம். இக்கருத்துக்களே பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இம் மனித உரிமைகள் பிரகடனமே மனிதனின் சமூக நீதிக்கும் சமத்துவத்துக்குமான உரிமைகளின் அடித்தளமாகத் கருதப்பட்டு வருகிறது.

கலாநிதி விரமந்திரி அவர்கள் குறித்த சில மேலைத்தேசத்தினதல்லாத கலாச்சாரங்கள் இந்த மாதிரியான உரிமை பேணலில் மேற்கு நாட்டவருக்கு வெகு காலத்திற்கு முன்னரே முறையான அக்கறை காட்ட தொடங்கியிருந்தாகவும் இவ் உரிமைகளின் வள அளவையும் விரிவாக்கத்தையும் பொறுத்தவரையில் அவை மேற்கு நாடுகளை மிஞ்சியிருந்தன[13] எனவும் தனது கருத்து வெளியிட்டிருந்ததுமல்லாது இதன் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இஸ்லாம் மதத்தையுங் குறிப்பிட்டிருந்தார். நவீன காலத்தின் மனித உரிமைகள் எனப் போற்றிப் பேணப்படும் அடிப்படைக் கருத்துக்கள் யாவும் கிழக்குத் தேச சித்தாந்தங்களிலும் மதங்களிலும் அவற்றின் அடிப்படைக் கோட்பாடுகளாகக் காலங் காலமாக இருந்து வந்துள்ளன.

இலங்கை நாட்டின் பெருமைக்குரியவனாக விளங்கும் ஒழுங்குகள் யாவும் இந்த வகையான இன கலாசார மற்றும் மதம் எனப்படும் பல்வகைத் தோற்றுவாய்களில் இருந்தே உருவெடுத்துள்ளன. தற்போதைய மனித உரிமையில் "சமவுரிமை உரிமை" யாக மாறியுள்ள குடும்பத் தலைவனை முதல்வனாகக் கொண்ட சமுதாயத்தின், பெண் புனிதமானவள் போன்ற பொதுவான கலாசார கோட்பாடுகள் ( கருத்துக்கள்) பண்டைய காலத்து மதச் சித்தாந்தங்களில் இருந்து வந்துள்ளன. மத நம்பிக்கைகளில் நன்றாக வேரூன்றியுள்ள மத அடிப்படையிலான பொதுவான கலாசாரப் பழக்க வழக்கங்களின் ஒரு தெளிவான வெளிப்பாடாக சர்வ மதங்களையுஞ் சார்ந்த பக்தர்களும் வழிபாட்டிற்காக சிவனொளிபாத மலை நோக்கி யாத்திரை செய்வதைக் குறிப்பிடலாம்.

இலங்கை ஒன்றோடொன்று பிணைப்புடைய கலாசரங்களையும் மதங்களையும் கொண்டதொரு நாடாகையால் அவற்றிற்கு இடையேயுள்ள வேற்றுமைகள் அந்தளவிற்கு பெரிதுபடுத்திக் கொள்ளக் கூடியனவாக இப்பொழுதில்லை என்றே கூற வேண்டும். சிங்கள தமிழ் புத்தாண்டுக் கொண்டாட்டம் பௌத்தர்களாலும் இந்துக்களாலும், கிறிஸ்தவர்களாலும் ஒரேமாதிரியாக மகிழ்வுடன் கொண்டாடப்படுகிறது. இந்துக் கடவுள்களை சிறப்பாக விஷ்ணு மற்றும் கதிர்காமக் கந்தன்[14] போன்ற தெய்வங்களை இலங்கை பௌத்தர்கள் வழிபட்டுவருவதைச் சர்வசாதாரணமாகக் காணலாம். இதெ போன்று இலங்கையிலுள்ள முஸ்லிம் திருமணச் சட்டம் கிறிஸ்தவ மதத்தவர் ஒருவரை வாழ்க்கைத் துணையாக எடுத்துக் கொள்வதைத் தடை செய்யாதுள்ளமை[15] கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாம் மதத்திற்கும் உள்ள பிணைப்பபை எடுத்துக் கூறுகிறது.

நிலமை இவ்வாறாக உள்ள போதிலும் இன்றைய இலங்கை நன்றாகப் பிளவுபட்டிருப்பதைக் காணலாம். இதற்கான காரணம் பல்லினத்தன்மை என்பதை விட பல் வகைப் பிரிவினரெனவே கொள்ள வேண்டும். இலங்கையர் யாவரும் ஒரே கலாச்சாரத்திற்குட்பட்ட பொது மனித இனம் என்ற உணர்வினால் மட்டுமே இம்மாதிரியான இன, மத, கலாச்சார வேற்றுமைகள்

பாராட்டாது மனித உரிமைக் கோட்பாடுகள் பேணலை ஊக்குவிக்கவும் கலாச்சாரங்களுக்கிடையே புரிந்துணர்வொன்றினைக் கொண்டுவருவதற்கும் உதவும் ஓர் உறுதுணைத் தளமாக அனைத்துலக மனித உரிமைகள் வெளிப்படுத்துகையைப் பயன்படுத்த முடியும்.

"எமது உலகிற்கு அவசிமான எவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நெறிகள் அனைத்துலக வெளிப்படுத்துகையில் அடக்கப்பட்டுள்ளன. எந்தவொரு சித்தாந்தத்தையோ மதத்தையோ அல்லது கலாச்சாரத்தையோ தனியாகக் குறிப்பிடாது இது அங்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. [16] எனினும் இலங்கையின் பாரிய மதப் பாரம்பரியங்களைப் பொறுத்தவரையில் அவற்றின் கோட்பாடுகளில் குறிப்பிடத்தக்க வேற்றுமைகள் இருக்கின்ற போதிலும் இம்மாதிரியான நியமங்களும் நெறிகளும் அடங்கியுள்ளதுடன், மனித உரிமைகளைப் பொறுத்த வரையில் வெளிப்படுத்துகையில் தெரிவிக்கப்பபட்டுள்ள கருத்துக்களை ஒத்தவையாக இவையும் உள்ளன.[17] இலங்கையில் பின்பற்றப்படும் மதங்களைப் பொறுத்தவரையில் கலாச்சார இன அடிப்படையிலான பிரிவுகளுக்கான பிரதம மூலக் காரணியாக மதம் அமைந்துள்ளது. ஆகையால் பௌத்த, கிறிஸ்தவ, இந்து மற்றும் இஸ்லாம் முதலான மதங்களை அவற்றிற்கு அனைத்துலக மனித உரிமைகள் வெளிப்படுத்துகையுடன் உள்ள கலாச்சார முக்கியத்துவத்தையும் இணைத்து ஆய்வு செய்வோமேயானால் அவற்றில் பிணைந்துள்ள மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட பொதுவான போதனை என்னவென்பதை அறிந்து கொள்ளலாம்.

மனித உரிமைகள் தொடர்பான பௌத்த மதக் கண்ணோட்டம் இரு அடிப்படை எண்ணக்கருக்களைக் கொண்டது. ஒன்று தத்துவஞ் சார்ந்ததும் மற்றையது நன்னெறி சார்ந்ததுமாக உள்ளது. மனிதன் முழுச் சுதந்திரம் உடையவனாகவும் பொறுப்புடமை மிக்க ஒருவனாகவும் அவதரிக்கின்றான் என்பதே தத்துவ அடிப்படையிலான எண்ணக்கரு.[18] இவ் அடிப்படைச் சுதந்திரமும், கௌரவத்திலும் உரிமையிலும் சமத்துவம்[19] எனும் கோட்பாடும் பௌத்த மதத்தில்

தன்சார்புடமைக்கு[20] அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தின் மூலம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலாக தம்மபதத்தின்படி ஒருவன் தானே தனது எஜமானனாயின் அவன் சுதந்திர மனிதனாகவே அவதரிக்கின்றான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எல்லாரும் அஞ்ஞான நிலையை அடையக் கூடியவர்களாக கருதப்பட்டால் அதனையும் மிஞ்சிய கௌரவமும் உரிமையுங் கொண்ட சமத்துவத்தை வேறெங்கும் கான முடியுமா?

புத்த மதத்தின் முதலாவது விதி[21] ஒருவனுக்குள்ள வாழ்வதற்கான உரிமையை புனிதமாகக் கருதுகின்றமையே. இதுவே வாழ்க்கைக்கான புத்தரின் நெறி. சேர் எட்வின் ஆர்னொல்ட் அவர்களது தெய்வீக மணம் பரப்பும் கவிதை வரிகள் இவ்வுண்மையை வலியுறுத்துகின்றன. ''கருணைக்காக என்றாலும் கொலை செய்யத் துணிய வேண்டாம் அப்படியில்லையென்று நீங்கள் யாரையாவது கொல்வீர்களாயின் அதனைப் போன்ற ஈனத்தனமான செயல் ஏதுமிராது.[22]'' உயிர் வாழ்வதற்கான புனித உரிமையும் இந்த விரிவெல்லைக்குள் பேணிக்காக்கப்பட்டுள்ளதுடன் மறுக்க முடியாததொன்றாகவும் இருந்து வருகிறது. மூன்று பரிமாணங்களின் அடிப்படையிலே மானிட சுதந்திரத்திற்கான விளக்கம் பௌத்த மதத்தில் அளிக்கப்பட்டுள்ளது. மனச்சாட்சி, பேச்சு மற்றும் செயல் முதலான மூன்றுமே அவை. பேச்சிற்கும் செயலுக்கும் முன்னோடியாக விளங்குவது மனச்சாட்சியே. பௌத்த மதத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அனைத்துலக அல்லது பிரபஞ்ச மெய்மையாக இதனைக் கொள்ளலாம், [23]மனித இனம் ஞான நிலையை அடையக் கூடிய உடலையும் மனதையுங் கொண்டதொரு அலகென்பதால்[24] மனிதனைச சித்திரவதைக்குள்ளாக்குவதோ அல்லது உடல் ரீதியாக இம்சைக்குள்ளாக்குவதோ புத்தரின் போதனைகளுக்கு எதிரானவையாகக் கொள்ளப்படுகின்றன. பௌத்த மதத்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ள நன்னெறிக் கோட்பாடுகள் பௌத்த மதகுருமார் அல்லது சங்கத்தைச் சேர்ந்தவர்களால் போதிக்கப்படுகின்றன. இக்கோட்பாடுகளில் மனித உரிமை பேணல் முக்கிய கருவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இம் மனித உரிமைகள் பௌத்த மதத்தைக் கடைப்பிடிப்பவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்றவும்படுகிறது.

பௌத்த மதத்திலுள்ள மனிதாபமானத்தின் அடிப்படையிலான இந்த அணுகுமுறையே சமுதாயத்தின் பெரும்பாலானோர் அதுவும் விசேடமாக அடக்கி ஒடுக்கப்பட்டு வரும் கீழ் மட்டத்தைச் சேர்ந்தவர்களுட் பெரும்பாலானோர் இம் மதத்தைத் தழுவக் காரணமாக உள்ளது. உரிமைகளின்றி ஏழ்மையாலும் பசிபட்டினியாலும் வாடி வதங்கும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுட் பெரும்பாலானோரது ஆதரவைப் பெற்றுக் கொள்வதில் பௌத்த மதம் வெற்றி கண்டுள்ளது. மக்களது நல்வாழ்வினுக்கான அபிலாசைகளை குறிப்பிடத்தக்க அளவில் வெளிப்படுத்தியதன் மூலம் பௌத்த மதம் வெற்றி கண்டுள்ளது[25]. அனைத்துலக அனுதாபமும் மனித உரிமைகளுமான இரு ஆதாரத் தூண்களும் எவராலும் அசைக்க முடியாத நிலையில் தர்மஆலயத்தில நீண்ட நெடுங்காலம் இருந்து வந்துள்ளன. சப்பே சத்த பவந்த சுகித்தத்த [26] (subbhe satta bhawantha sukithatha) கௌதமர் ஆருடம் கூறியதற்கமைய "தம்மம்" அதன் உண்மையான வடிவில் இலங்கைத் தீவில் வேரூன்றியுள்ளது. 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வரும் ஒரு கலாசார பாரம்பரியத்தின் பிரித்தெடுக்க முடியாததொன்றாக அது விளங்குகிறது.

இது மட்டுமல்லாது கடவுளின் உருவிலிருந்து மனிதன் உருவாக்கப்பட்டுள்ளமையால் எல்லோரும் சமமானவர்கள் என்பது மட்டுமல்லாது தெய்வத்தின் பார்வையில் சமமானர்களாகக் கருதப்படுபவர்களே. மனிதனும் ஒருவரையொருவர் சமமாகப் பார்ப்பதே நல்லது. மனிதன் மனிதனை ஆட்சி செய்கிறானென்றாலும் மனித இனங்கள் யாவும் கடவுளுக்குப் பணிவானவையே. கடவுளே ஆட்சி செய்கிறார். தெய்வத்தின் இராசதானியில் வேற்றுமையில்லையென்ற கருத்தை ஏழைகள், பிரதிகூல நிலையிலுள்ளவர்கள், சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள் போன்றோர் மீது காட்டும் விசேட அக்கறை மூலம் கடவுள் தெளிவாக வலியுறுத்துகிறார்.[27] நல்லன பற்றியும் தீயன பற்றியும் விவிலியத்தில் ஜெனெசிஸிலிருந்து றெவெலேசன் வரைக்கும் எடுத்துக் கூறப்பட்டு வரும் கருத்துக்கள் எல்லாம் வெறுமனே நியாயத்தையும் மனச்சாட்சிக்குச் சரியெனப்பட்டதையும் வெளிப்படுத்தும் சுதந்திரத்தின்

வழிகாட்டிகளேயன்றி வேறேதுமல்ல. சகோதரத்துவ உணர்வினை, நல்லன, நேர்மை, நீதி மற்றும் சமாதானம் முதலானவற்றுடன் இணைத்து தீயவற்றை வெற்றி கொள்ளும் தேவனின் இராட்சியத்தில் காணலாம்.[28]

வாழ்விற்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்குமான உரிமைகள் கிறிஸ்தவ மதத்தின் தூய வட்டத்தினுள் தெய்வீகமாக்கப்பட்டுள்ளன. யூதர்களைச் சரண் அடையுமாறு அழைப்பு விடுக்கும் அரசன் அஸ்ஸிரிய ''ஒவ்வொருவரும் தனது சொந்த இடத்திலேயே சந்தோசமாக வாழலாம். தனது தடாகத்திலேயே தாகத்தைத் தீர்த்துக்கொள்ளலாம்[29]'' எனும் உறுதியை அவர்களுக்கு வழங்குகின்றார். கண்ணுக்குக் கண, பல்லுக்குப் பல் போன்ற கேட்பதற்கு கொடூரமானதும் வலோத்காரமானதுமான குற்றவியற் பழக்க வழக்கங்களின் மிலேச்சத்தனத்தைத் தணிப்பதற்கான செயல்களாகவே இதனை எடுக்க வேண்டும். கொடூரத்திலிருந்தும் இழிவுபடுத்தலிருந்தும் [30] மனிதனது சுதந்திரம் இம்மாதிரியான வழிமுறைகள் மூலம் பாதுகாக்கப்படுகின்றது.

நாட்டின் அதிகாரத்தை மிஞ்சுமளவு சக்திமிக்கதான ஓர் இடத்திலிருந்துதான் மனித உரிமைக் கோட்பாட்டின் தளமே உருவானதென இறை நூல் குறிப்பபிடுகிறது. அந்தத் தளமே சர்வவல்லமை பொருந்திய இறைவன் ( Supreme Being). [31] ஆகையால் அது புனிதத் தன்மைமிக்கதும் எவராலும் மீறக்கூடியதுமல்ல. மனித உரிமைகளின் இப் புனிதத்தன்மை காரணமாக விவிலியத்திற் காணப்படும் பத்துக் கட்டளைகளிலிருந்து மற்றையவை வரையிலும் மனித உரிமைகளைத் தூய்மையானதாகப் போற்றிக் கூறியுள்ளன. புனித விவிலியத்தின் பக்கங்களில் மனித உரிமைகளின் அடித்தளத்தையே ஊடுருவும் வகையிலான போதனைகளைக் காணலாம். இவை பின்னர் நம்பிக்கையின் அடிப்படையிலான பற்றுக் கோளாக மனிதனின் மனதைக் கொள்ளை கொள்ளக் கூடும். ஆகையால் நாம் ''தேடு, தேடினால் கண்டு பிடித்து விடுவாய்'' என்ற நிலையில் இருக்க வேண்டியதேயன்றி வேறொன்றுமில்லை.

முஸ்லிம் சமூகத்தினரது பாரம்பரியமான பழம்பெரும் இஸ்லாமிய நாகரிகம் அளித்துள்ள பயனைக் கருத்தில் எடுக்காது இலங்கையின் பல்லினத்தன்மை மற்றும் மனித உரிமைகள் கோட்பாட்டைப் பற்றிய ஆய்வில் இறங்க முடியாது. அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் அடிப்படையில் இஸ்லாமிய பாரம்பரியங்களைப் பற்றி கலாநிதி ஏ.ஆர்.பி அமரசிங்க அவர்கள் வெளியிட்ட உணர்வலைகள் அவை எத்தகையனவென்பதைத் தெளிவாகக் கூறுகின்றன. தங்களது தேசத்தை வழிநடத்துவதற்கான கொள்கைகளை புனித குறானை அடிப்படையாகக் கொண்டு வகுத்துள்ள தேசங்கள் இம்மாதிரியான உரிமைகள் உள்ளனவென்பதை உறுதியாக ஏற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த அடிப்படை உரிமைகளைக் கடைப்பிடிப்பதில் அதீத அக்கறை காட்டியும் உள்ளன. இவ் அடிப்படை மனித உரிமைகளை மனித இனத்தின் அடிப்படைத் தேவையாகவும் முழு உலகத்திற்கும் ஏற்புடையதொன்றாகவும் [32] மனித இனத்தால் கருதப்படுகிறது.

மனிதனாகப் பிறவியெடுக்கும் ஒவ்வொருவனும் கௌரவத்திற்குரியவன். இக் கௌரவத்தை எவராலும் பறித்துவிட முடியாது. குறானில் மனிதனின் இந்தக் கொரவத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. மனிதனைத் தோற்றுவிக்க கடவுள் கையாண்ட திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு மனிதனை உயரிய நியைில் வைத்திருப்பதை கட்டியம் கூறும் இதே போன்ற எண்ணிலடங்கா வாசகங்கள் உள்ளனவென்பதும் யாவரும் அறிந்ததே.

''ஆதாமின் புதல்வர்களுக்குக் கௌரவமளித்துள்ளதுடன் எம்மால் சிருஷ்டிக்கப்பட்டுள்ள பெரும்பாலானவற்றிற்கும் மேலாக ஆதாமின் புதல்வர்களுக்குச் சிறப்புச் சலுகைகளையும் வழங்கியுள்ளோம்'' [33] (பெண் உள்ளிட்ட) மனித இனத்திற்கு கௌரவத்திலும் உரிமைகளிலும் சமத்துவம் உண்டென்பதையும் அந்த உரிமைகள் மனிதனுக்கு கிட்டுவதில் உள்ள நெகிழ்வில்லாத்தன்மையையும் உறுதிப்படுத்தும் போதனைகள் குறானில் உள்ளன. ''மானிடா ஒரே உருவில் இருந்து உன்னையும் உனது துணையையும் சிருஷ்டித்த உனது பிதாவிற்கு நீ ஆற்ற வேண்டிய கடமையை மறந்து விடாதே''.

..............................உனக்குரிய பரஸ்பர உரிமைகள் கிட்டவேண்டுமென வருந்திக் கோரும் அல்லாவிற்கு நீ ஆற்ற வேண்டிய கடமையையும் மறந்துவிட வேண்டாம். உனக்கும் அல்லாவிற்கும் இடையே உள்ள உறவை எண்ணிப் பார்க்கத் தவற வேண்டாம்.[34]

புனித குறான் கூறும் சட்டத்தில் உயிர் ஒன்றைப் பறித்தெடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது. ''ஏனெனில் அல்லா உயிரைப் புனிதமானதாகக் குறிப்பிட்டுள்ளார்''[35]

உயிர் வாழ்வதற்கான, சுதந்திரமாக வாழ்வதற்கான, ஒருவரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான உரிமைகளின் பாதுகாப்பு தொடர்பான நெறிகளும் ஏற்றுக் கொள்ள வேண்டியவையெனப் புனித குறானில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இஸ்லாம் மதத்தின்படி எல்லா உயிர்களுக்குமான ஊற்றாக எல்லாம் வல்லவர் கருதப்படுகின்றாரென்பதுடன் இவ் உயிர்கள் யாவும் புனிதமானவையுமே. சுதந்திரமும் பாதுகாப்பும் இந்த (வாழ்வின்) உயிரின் ஓர் அங்கம். நல்லொழுக்கம் நன்னெறி மற்றும் நேர்மை முதாலாயினவற்றிற்கு இஸ்லாமிய கொடுத்துள்ள முக்கியத்துவத்தின் வெளிப்பபாடாக அடிப்படையில் நாகரிகமடைந்திராத காட்டுமிராண்டிகளைப் போன்று வாழ்ந்து வரும் மனித சமூகம் இழைக்கும் குற்றங்களுககான தண்டனைகள் சில குறானில் தெரிவிக்கப்பட்டுள்ளன. எனினும் இஸ்லாமிய ஆட்சியமைப்பில் நீதி வழங்கப்படும் வேளைகளில் கருணை காட்டப்படுகின்றது. ஒரு மானிடனின் அங்கங்கள் துண்டிக்கப்படுகின்றமை தடை செய்யப்பட்டுள்ளது. ஒரு முஸ்லிம் தேசம் அதன் எதிரியினால் படுகொலை செய்யப்படும் நிலைக்குள்ளானாலும் இந்த நெறி பேணப்படல் வேண்டுமென்பதே இஸ்லாமிய ஆட்சிமுறையின்[36] ஒழுங்கு. குற்றவியல் நீதித்துறையுடன் சித்திரவதையிலிருந்தான பாதுகாப்பும் இந்த பழமைமிக்க நாகரிகத்தில் ஒருங்கே பேணிக்காக்கப்பட்டு வந்துள்ளது.

இலங்கையைப் போன்ற பல்லின மக்கள் வாழ்கின்ற நாட்டில் இஸ்லாம் மதத்தில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள நீதி பரிபாலன ஒழுங்கினை அப்பழுக்கின்றிப் பின்பற்றுதல் மிகவும் முக்கியமாகின்றது. ஏனைய நீதிபரிபாலனைத் துறைகளில் பெரும்பாலும் கையாளப்பட்டு வரும் அடிப்படைவாத வியாக்கியானங்களின் அடிப்படையில் பின்பற்றப்படும் இக் கோட்பாடுகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தும் விதமான கருத்துக்கள் உள்நாட்டிலுள்ள சமூகங்கள் மீது தாகத்தினை உண்டு பண்ணக் கூடிய சாத்தியக் கூறுகள்[37] உள்ளதால் இந்த நெறிகளை எவ்வித மாற்றமுமின்றிக் கடைப்பிடித்தல் அவசியமாகின்றது. ''உலகில் இதுகாலவரை இருந்த கலாசார பாரம்பரியங்களுள் நன்றாக வளர்ச்சி அடைந்துள்ளதும் நுண் அறிவு மற்றும் ஆற்றல் முதலானவற்றின் அடிப்படையில் மிகவும் செழுமை நிறைந்ததுமான கலாசாரம்[38] எனக் காணப்படுகின்ற ஒன்றினை நவீன உலகம் ஏற்றுக் கொள்ள தயக்கம் காட்டுவது ஏன் என்பது தான் தெரியவில்லை. அது மட்டுமல்லாது சிறப்பாக மேற்குலகத்தவரின் கண்டனங்களுக்கும் இல்ககாகி வந்துள்ளது. இஸ்லாம் மதத்தில் உள்ள நேர்மை மற்றும் நியாயம் முதலான சிறப்புக்களை இன்று காணக் முடியவில்லையெனும் காரணத்தைக் காட்டியே மேற்குலகத்தின் கண்டனங்களுக்கு அம்மதம் இலக்காகியுள்ளது.

இஸ்லாம் மதத்தில் மனிதாபிமானப் பிரச்சினைகள் கையாளப்பட்டுள்ள விதத்தை உள்நாட்டு விவகாரங்களைக் கையாளும் போதாவது மேலும் சிறப்பாகக் கடைப்பிடிப்போமேயானால் தற்போதைய உலக அரங்கில் அதி தீவிரமாகப் பின்பற்றப்பட்டு வரும் அதே உரிமைகளின் உறுதியான கடைப்பிடிப்பிற்கான விளக்கமாகவும் அது அமைந்து விடலாம். ஏனெனில் ''உலகின் தேசங்கள் நல்லுறவின் அடிப்படையில் ஒன்றோடொன்று செயற்படுவதற்கு ஏதுவாக பாரிய தளநியதி (கோட்பாடு) ஒன்றினை அம்மதம் முன்வைத்தது. அதன் அடிப்படையில் உண்மையான சனநாயகம் ஒன்றினையும் உலகிற்கு வழங்கியது. மனிதனுக்கிடையே உள்ள அவன் எங்கிருந்து வந்தான்? அவன் எந்த தேசிய இனத்தைச் சார்ந்தவன் போன்ற வேற்றுமைகள் யாவையும் களைந்தெறிந்தது''.[39]

இலங்கையின் பண்பிற்கு உயர்வளிக்கும் பணியில் இந்து மதமும் முக்கிய பங்காற்றி வருகின்றது. கிறிஸ்துவ மற்றும் இஸ்லாமிய மதங்களுக்குள் மனித உரிமைகள் கரு எவ்வாறு தோற்றம் பெற்றதோ அதனைப் போன்றே மனித உரிமைகள் பற்றிய இந்து மதக் கருத்தும் தெய்வத்தை மையமாகக் கொண்டதாகும்.[40] இந்து மதத்தில் பொதிந்துள்ள சிறப்பு, கண்ணுக்குப் புலனாகத் தெய்வம் ஒன்று உள்ளமையே; ''அதுவே ஆரம்பமே இல்லாததும் சர்வ வல்லமை மிக்கதும். அதனை ஓர் உயிர் உள்ள பொருள் என்றோ உயிர் இல்லாத பொருள் என்றோ கருத முடியாது''[41] அதன் ஒரு வெளித்தோன்றலாக மனிதன் கருதப்படுகிறான். தெய்வத்தின் ஓர் அங்கமாகவும் அவனை ஒரு வகையிற் குறிப்பிடலாம். ஆனமையால், சிருஷ்டிப்பின் ஒரு துளியாக மானிடன் கருதப்படுகிறான். கௌரவத்திலும் உரிமையிலும் மனிதனுக்குள்ள சமத்துவம் இவ் வெண்ணக் கருவினால் உறுதி செய்யப்படுகிறது.

இந்தளவு மகிமை மிக்கதாக இருந்தும் சமத்துவமின்மையை அதன் சாதியத்தின் மூலம் ஊக்கவிக்கின்றதென இந்து மதம் கடும் கண்டங்களுக்கும் இலக்காகியுள்ளது. எனினும் இப்பொழுது நிலவி வரும் அடக்குமுறை சாதிப்பிரிவுகள் ''ஆத்மன் உடன் இனங்காணப்பட்டுள்ள எங்கும் எப்பொழுதும்'' எனும் பிரம்மனின்[42] அடிப்படை இந்து வேதாந்தத்திற்கு முற்றிலும் எதிரானவையே. இந்தியாவின் பல்லினத்தன்மை காரணமாக உருவானதே சாதிமுறையென்பது ஒரு சில அறிவாளிகளது அபிப்பிராயம்[43] ''ஒவ்வொரு தனி மனிதனின் பெருமைகளுக்கும் சிறுமைகளுக்கும் ஏற்ப இறைவனின் சிருஷ்டியில் சமத்துவமின்மை உருவாகின்றது என்கிறது பிரம்ம சூத்திரம். இதன் காரணமாக சமூகத்திலுள்ள வெவ்வேறு தொழில் ரீதியான வேற்றுமைகளின் தொடர்ந்த பயன்பாடு உறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும் எல்லா வகைச் சாதியும் ஒரே புருஷனிலிருந்து அல்லது இறைவனின் மூலத்திலிருந்தே[44] உருவாக்கப்படுகின்றதென்பதால் மனிதர் யாவரும் சமமெனும் அடிப்படைத் தத்துவம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதனை விட சட்டவியற் கோட்பாடான சமநிலையிலுள்ள யாவருக்கும் சமமான கவனிப்பு''[45] இந்து சமயத்தில் இருப்பதைக் காணலாம்.

இந்து சமயத்தில் மனச்சாட்சிப் படி ஒழுகுவதற்கான சுதந்திரம் கிருஷ்ணரால் கீழ்காணும் வாசகங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.[46] ''என அகத்தேயுள்ள ஜீவன் ஆகிவிட்ட ஒரு பகுதி புலன்களை ஈர்க்கிறது. அந்த புலன்களில் ஆறாவது புலனான மனம் சடத்தினால் இயக்கப்படுகின்றது'' [47] ஆதிகாலத்தைய இந்து மத தத்தவ ஞானத்தின்படி ஒருவனுக்குள்ள வாழ்க்கை, சுதந்திரம், பாதுகாப்பு முதலானவற்றிற்கான உரிமைகள் ஏனையவர்களுக்குள்ள கடப்பாடுகள் காரணமாக அவனுக்கு வந்து சேருகின்றன. இதன் ஒரு எடுத்தக்காட்டாக குடிமக்களது பாதுகாப்பில் அரசிற்கு உள்ள கடமைக்கு அதீத முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளமையைக் குறிப்பிடலாம். ''எல்லா உயிரினங்களுடைய வாழ்விற்கும் ஆதாரமாக மழை விளங்குவதைப் போல அரசினின் நீதி அவனது குடிமக்களுக்கு அவசியமான ஆதாரமாக விளங்குகிறது.[48] '' மனிதனது அடிப்படைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதிலேயே முக்கிய அக்கறை கொண்டுள்ள ஓரளவிற்குச் சிக்கல் நிறைந்த இந்துமத தத்துவ ஞானத்தில் உள்ள பல்வேறு கோட்பாடுகள் பற்றிய விளக்கங்களை பகவத் கீதையைப் படித்துக் கொள்வதன் மூலம் தெளிவுற அறிந்து கொள்ள முடியும்.

இந்துக்கள் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலேயே அதிகமாக வாழ்கின்றனர். இப்பகுதி மிகச் சமீப காலம் வரையிலும் இரத்த ஆறு பாயும் இரக்கத்தனமற்ற போரினால் பாரிய அழிவிற்கு உள்ளாக்கப்பட்டிருந்ததுடன் இத்தீவில் அதிகளவு மனித உரிமை மீறல்கள் பதிவாகக் காரணமும் ஆகியது. இதில் உள்ள விசேடம் என்னவென்றால் இந்த மனித உரிமைகளுட் சிலவற்றினுக்காகத்தான் (சிறுபான்மை) இப்போரே இடம் பெறுகின்றதென்பதுதான். நீண்ட காலமாக இலங்கைக்கு ஏற்பட்டுள்ள அவலம் எனப் பலராலும் விவரிக்கப்பட்டு வரும் இம்மாதிரியானதொரு சூழ்நிலையில் கலாச்சாரங்களுக்கிடையே உருவாக வேண்டிய புரிந்துணர்வின் அவசியத்தை நாம் குறைத்து எடை போட முடியாது. மேலே தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களடங்கிய ஆய்வுகளின் படி இலங்கையை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதானால்

ஒன்றிணைந்த தேசிய கலாச்சாரம் ஒன்றுக்குட்பட்ட பொது நோக்கிலான உள்ளார்ந்த ஆற்றல்களையும் முன்மாதிரிகளையும் மீள் அறிமுகம் செய்து பணியாற்றவல்ல முறைவழியொன்று அவசியமாகின்றது. புத்தர் வெளியிட்ட "எல்லாமே இந்த எண்சாண் உடம்பிற்குள் அடங்கியுள்ளது" எனும் கருத்து இலங்கையின் கலாச்சார பாரம்பரிய காப்பகத்தினுள் நன்றாக வேரூன்றியுள்ளது.

ஆகையால் ஆட்சிக்கான அடிப்படைகளாக விளங்கும் மனிதாபிமானஞ் செறிந்த மேலாண் மதக் கருத்துக்களுடன் தொடர்புடையதான கீழைத்தேயக் கலாசாரங்களை அச்சாணியாகக் கொண்டு சுழலும் சக்தி தான் மனித உரிமைகள் என்பதை உணர வேண்டும். அதே வேளை மேற்கு நாடுகள் மூலம் எமக்குக் கிடைத்த அனுபவத்திலிருந்து தெரிவது என்னவென்றால் றோமன் கத்தோலிக்க திருச்சபை போன்ற சக்தி மிகு மத அமைப்புக்கள் மூலமான ஆட்சி இவ்வகை அமைப்புக்கள் மனித உரிமைகளை அனுபவிக்க விடாது தடுக்கும் சமயக் கொள்கைகளையும் பழக்க வழக்கங்களையும் புகுத்தியதன் மூலம் தமது பலத்தை வளர்க்கும் பணியில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டன. இச் செயல் ஆட்சியிலிருந்து மதத்தை வேறுபடுத்தும் மதச்சார்பற்ற நாடுகளின் தோற்றத்திற்கு வழி கோலின. வேறுபடுத்திக்காட்டும் இச் செயல் காரணமாக உருவான வெற்றிடத்தை நிரப்புவதற்கு மதச்சார்பற்ற ஆட்சியமைப்புக்களுக்கு துணையாக மதப்போதனைகளுக்கு பதிலாக மனித உரிமை நியதிகளைப் போதிக்க வேண்டிய நிலை உருவானது. எனினும் மனிதாபிமானத் தன்மை செறிந்துள்ள பண்டைய கலாசாரங்களுக்கு அதே போன்ற இவ் நியதிகளை மேலதிமாகப் புகுத்தும் பணியானது கேலிக்குரிய விடயமாகும். இதனை விட ஏலவே உள்ள நியதிகளை மீண்டும் போதிப்பது நிச்சயம் உரிய பலனைத் தாராளமாக வழங்கும் என்பதிற் சந்தேகமில்லை. இன, கலாசார, மத ரீதியாகச் சிந்திக்கும் இலங்கையிலும் மனித உரிமைகள் செழுமையும் பழமையும் மிக்கதுமான கலாசார பாரம்பரியம் ஒன்றின் உயிர் நாடியாக விளங்கி வந்துள்ளது.

முன்னைய பாரம்பரியத்தைப் பின்பற்றுவதைத் தனது முக்கிய வழக்கமாகக் கொண்ட நாடு இலங்கை. சட்டவியற்றலகள் மூலம் கொண்டுவரப்படும் தற்போதைய மேலெழுந்தவாரியான வழமைக்குப் புறம்பானவைகளை ஏற்கக் கூடிய நாடல்ல. இலங்கையின் பாரம்பரிய மத மற்றும் கலாசார பழக்க வழக்கங்களில் பொதிந்துள்ள உண்மைகளை பண்பின் அடிப்படையிலான ஆழமான கோட்பாடுகளிலிருந்து உருவானவையாகக் கருதி ஆய்ந்து இலை மறை காயாக உள்ள மனித உரிமைக் கோட்பாடுகளுக்கு இடமளிப்பதே சிறந்தது. மனித உரிமை மீறற் கொடுமைகளால் அல்லலுற்றிருக்கும் இலங்கை நாட்டின் இப்பொழுதைய துயர நிலைக்கான காரணம் அதன் உள்ளார்ந்த பண்புகளின் அடிப்படையிலான ஒழுங்கு முறை அல்ல. இன ரீதியிலான பிரிவினை வாத அடிப்படையிலான தனிப்பட்ட குறுகிய நோக்கிலான ஊகங்களே................................ .

''காரம் பரப்பும் நறுமணத் தென்றல் இலங்கைத் தீவெங்கும் இதம் பரப்பினும் இனிய எதிர்பார்ப்புக்கள் இருந்தும் மனிதனில் இனிமையில்லையே............''பிசொப் றெஜினோல்ட் ஹெபர் (1811)[19]

1 பிரேமசிறி PD "பௌத்த கோட்பாடுகளில் சிறுபான்மையினர்" கே.எம். சில்வா, பொன்சிறி டியூக் எலன் மற்றும் நேதன் கேற்ஸ் பௌத்த சமூகங்களுக்கிடையேயான இன மோதல் - இலங்கை, தாய்லாந்து, பர்மா வரையறுக்கப்பட்ட பிறின்ரர் வெளியீட்டாளர்கள் (1988 பக்கம் 45)

2 ஈரானிய இஸ்லாமிய குடியரசின் மனித உரிமை நிலைமை தொடர்பான அறிக்கையை பார்க்கவும் ஊகு தொம் பெறி பற்றிக அனைத்துலகச் சட்டமும் மனித உரிமைகளும் எனும் புத்தகத்துடன் ஒப்பிடவும் கிளாரெண்டன் ஆக்கம் ஒஸ்போர்ட் (1991) பக்கம் 91

3 கிருஸ்ணசாமி மத உரிமைகள் கடைப்பிடிப்புக்கள் முதலானவற்றிலுள்ள ஓரங்காட்டடல் ஆய்வு ஐநா விற்பனை இல. 60ஓ C 2 47- ஊத தொம்பெறிற்றிக் அனைத்துலகச் சட்டம் மனித உரிமைகளும் கிளாரெண்டன் அச்சகம் ஒக்ஸ்போர்ட் (1991) பக்கம் 91

4 htt/www/uiesco.org/most/rr2int.htm

5 வலஸ், றெபெக்கா அனைத்துலக மனித உரிமைகள் வாசகமும் மூலப்பொருட்களும் ஸ்வீற் மற்றும் மக்ஸ்வெல் (197) பக்கம் 144

6 இலங்கை சனநாயக குடியரசின் அரசியல் யாப்பின் உறுப்புரை 9 (1978 செப்டெம்பர் 7 ந் திகதி கொண்டுவரப்பட்ட திருத்தத்திற்கு அமைவானது

7 தேர்தற் தொகுதிகளின் மீளாய்விற்கான ஆய்வுக்குழுவினது அறிக்கை 1959 ம் ஆண்டின் XV ம் இலக்க அமர்வு அறிக்கை பக்கம் 13 ஒப்பிடவும் பொன்னம்பலம் சச்சி இலங்கை தேசிய பிரச்சினையும் தமிழ் விடுதலைப் போராட்டமும் வரையறுக்கப்பட்ட ஸெட் புத்தகங்கள் 1985 பக்கம் 72

8 "தானாகத் தனித்து அல்லது ஏனையவர்களுடன் கூட்டாகச் சேர்ந்து பொது இடங்களிலோ அல்லது தனியாகவோ தான் விரும்பிய மதத்தின் அல்லது நம்பிக்கையின் பிரகாரம் வழிபடவோ அனுஷ்டிக்கவோ கடைப்பிடிக்கவோ கூடிய உரிமை" (உறுப்புரை 14 (1) ஈ)

9 றோமானிய டச் சட்டத்திற் காணப்படும் "Generalia special non derogate"

10 சில்வா பத்மசிறி த, "இன அடையாளம் எனும் வெளித்தோற்றத்தின் தர்க்க முறையும் இன வன்முறையின் நெறியும் - ஒரு பௌத்தனின் பார்வையில் CR (பதிப்பு) கே. எம். டி. சில்வா பென்சிறி டியூக் ஸெலென்.எஸ் கோல்பேர்க் மற்றும் நேதன் கற்ஸ், பௌத்த சமூகங்களிடையே இனக்குழும மோதல் இலங்கை, தாய்லாந்து பர்மா, வரையறுக்கப்பட்ட அச்சக வெளியீட்டாளர்கள் (1988) பக்கம் 12

11 இதன் காரணமாகவே ஜெனறாலியா ஸ்பெலிபன் நொன் டெறோகத்தாவின் பொதுச் சட்டக் கோட்பாட்டில் அடிக்கடி தங்க வேண்டிய நிலை

12 சி. ஜி. வீரமந்திரி முன்னரங்குகளற்ற நீதி மனித உரிமைகளின் விரிவாக்கம் (தொகுதி 1)

13 ஹொறஸ் டிபரேறா (பதிப்பு) மனித உரிமைகளுக்குக இலங்கையின் மதங்களும் இலங்கை மன்றம்

14 இம்மாதிரியான திருமணங்கள் " பாஸிட் **(Fasid)** (மட்டுப்படுத்த விதிகளுக்கமைந்த திருமணங்கள்) முறையிலானவை. இவற்றை பட்டில் **(Batil)** முற்றிலும் தடை செய்யும் திருமணங்கள்) ஆகக் கொள்ள முடியாது.

15 ஹொறஸ் பெரேறா (பதிப்பு) மனித உரிமைகளும் இலங்கையின் மதங்களும் இலங்கை மன்றம் (1988) (இனி மனித உரிமைகளும் மதங்களும் எனக் குறிப்பிடப்படும்) பக்கம் 10

[16] மேலே குறிப்பிடப்பட்டவை அதே புத்தகத்திலிருந்து. மேற்கோள் காட்டப்பட்டவை

[17] மனித உரிமைகளும் சமவாயங்களும் அதி விசேட குறிப்பு 14 3 ம் பக்கம

[18] அனைத்துலக வெளிப்படுத்துகை உறுப்புரை 1

[19] தனி முயற்சி(அட்டக்கற) மனித வலு புரச வைரியம் பொறுப்புடைமை (புரசா தேறய)போன்ற நெறிகளைக் கடைப்பிடிப்பதன் மூலமே தன்னுறுதி எட்டலாம்

[20]. பஞ்ச சீலம

[21] சேர் எட்வின் ஆர்னொல்ட் "ஆசிய ஜோதி" (பாடங்களடங்கிய பதிப்பு) சிங்கப்பூர் பௌத்த தியான நிலையம் (1996)

[22] மனித உரிமைகளும் சமவாயங்களும் அதி விசேட குறிப்பு 14 23 ம் பக்கத்தில் உள்ளது.

[24] சுவாறிஸ் நளின் பௌத்தம் மனித உரிமைகளும் சமூக புத்தாக்கமும் ஆகிய மனித உரிமைகள் ஆணைக்குழு (டிசெம்பர் 2000) பக்கம் 14

[25] ''எல்லா உயிரினங்களும் சுகமாகவும் சந்தோசமாகவும் வாழட்டும்''

[26] ஷேர்ஸ்ரன் ஜெறோம் ஜே மனித உரிமைகளின் தத்துவ தளங்கள் எனும் புத்தகத்துடன் ஒப்பிடவும் மனித உரிமைகள் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை வெளியாகும் சஞ்சிகை தொகுதி 20 இலக்கம் 02 மே 1998 தொடர்ந்து உஷாத்துணையாகக் குறிப்பிடும் பொழுது ''மனித உரிமைகள் தத்துவ தளங்கள்'' எனக் குறிப்பிடப்படும்

[27] மனித உரிமைகளும் மதமும் அதி விசேட குறிப்பு 14 பக்கம், பக்கம் 25 (2 அரசர் 18:31)

[28] மேலே குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள் யாவும் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் உறுப்புரை 1 ன் கூறுகளாகும்.

[29] மனித உரிமைகளும் மதமும், சிறப்புக் குறிப்பு 14 8 ம் பக்கத்தில் உள்ளது.

[30] மனித உரிமைகள் தொடர்பான அனைத்துலக வெளிப்படுத்துகையின் உறுப்புரை 5

[31] மனித உரிமைகளின் சித்தாந்தத் தளங்கள் மேலதிக சிறப்புக் குறிப்பு 25

[32] ''மனித உரிமைகளும் இஸ்லாமிய பாரம்பரியமும்'' ஏ.ஆர்.பி அமரசிங்க ''வாழ்க்கை வெறும் கடமையே'' எ.ஆர்.பி.அமரசிங்க அவர்களால்

16 மேலே குறிப்பிடப்பட்டவை அதே புத்தகத்திலிருந்து. மேற்கோள் காட்டப்பட்டவை

17 மனித உரிமைகளும் சமவாயங்களும் அதி விசேட குறிப்பு 14 3 ம் பக்கம

18 அனைத்துலக வெளிப்படுத்துகை உறுப்புரை I

19 தனி முயற்சி(அட்டக்கற) மனித வலு பரச வைரியம் பொறுப்புடைமை (புரசா தேறய)போன்ற நெறிகளைக் கடைப்பிடிப்பதன் மூலமே தன்னுறுதி எட்டலாம்

20 பஞ்ச சீலம

21 சேர் எட்வின் ஆர்னொல்ட் "ஆசிய ஒளி" (பாடங்களடங்கிய பதிப்பு) சிங்கப்பூர் பௌத்த தியான நிலையம் (1996)

22 மனித உரிமைகளும் சமவாயங்களும் அதி விசேட குறிப்பு 14 23 ம் பக்கத்தில் உள்ளது.

24 சுவாறிஸ் நளின் பௌத்தம் மனித உரிமைகளும் சமூக புத்தாக்கமும் ஆகிய மனித உரிமைகள் ஆணைக்குழு (டிசெம்பர் 2000) பக்கம் 14

25 ''எல்லா உயிரினங்களும் சுகமாகவும் சந்தோசமாகவும் வாழட்டும்''

26 ஷேர்ஸ்ரன் ஜெறோம் ஜே மனித உரிமைகளின் தத்துவ தளங்கள் எனும் புத்தகத்துடன் ஒப்பிடவும் மனித உரிமைகள் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை வெளியாகும் சஞ்சிகை தொகுதி 20 இலக்கம் 02 மே 1998 தொடர்ந்து உஷாத்துணையாகக் குறிப்பிடும் பொழுது ''மனித உரிமைகள் தத்துவ தளங்கள்'' எனக் குறிப்பிடப்படும்

27 மனித உரிமைகளும் மதமும் அதி விசேட குறிப்பு 14 பக்கம், பக்கம் 25 (2 அரசர் 18:31)

28 மேலே குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள் யாவும் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் உறுப்புரை 1 ன் கூறுகளாகும்.

29 மனித உரிமைகளும் மதமும், சிறப்புக் குறிப்பு 14 8 ம் பக்கத்தில் உள்ளது.

30 மனித உரிமைகள் தொடர்பான அனைத்துலக வெளிப்படுத்துகையின் உறுப்புரை 5

31 மனித உரிமைகளின் சித்தாந்தத் தளங்கள் மேலதிக சிறப்புக் குறிப்பு 25

32 ''மனித உரிமைகளும் இஸ்லாமிய பாரம்பரியமும்'' ஏ.ஆர்.பி அமரசிங்க ''வாழ்க்கை வெறும் கடமையே'' எ.ஆர்.பி.அமரசிங்க அவர்களால்

நிகழ்த்தப்பட்ட சில உரைகள் பண்டா என்.ஜே சுமணசேகர ஆகியோரால் தொகுக்கப்பட்டு சர்வோதைய பிரசுர சேவையாளரால் (1994) வெளியிடப்பட்ட புத்தகத்தில் 116 ம் பக்கத்தில் உள்ளனவற்றுடன் ஒப்பிடுப் பார்க்கவும்.

33 ஜீ.ஜீ வீரமந்திரி அவர்களது இஸ்லாமிய சட்டத்துறை அனைத்துலக தொலைநோக்கு 1999) சர்வதேச விஷ்வ லேக பிரசுராலயத்தினால் பிரசுரிக்கப்பட்ட புத்தகத்தின் ''குரான்'' ( சுர XVII:70 ) ஐ பார்க்கவும் தொடர்ந்து வரும் குறிப்புக்களில் இஸ்லாமிய சட்டத்துறை எனும் பெயரால் குறிப்பிடப்படும்

34 குரான் சுர 4:1

35 குரான் ( சுறா 6:151 மனித உரிமைகளும் சமயங்களும் அதி விசேட குற்ப்பு 14 பக்கம்27

36 மனித உரிமைகளும் சமயமும் அதி விசேட குறிப்பு 14 பக்கம் 27

37 அப்கானிஸ்தானில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் ஒரு எடுத்துக்காட்டுக்காகக் குறிப்பிடுவதனால் இஸ்லாம் மதத்தின் பெயரால் இழைக்கப்பட்டுள்ள இந்த மீறல்கள் முழு உலகையையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது

38 இஸ்லாமிய சட்டவியல் விசேட குறிப்பு 32 112 ம் பக்கத்தில் உள்ளது

39 39 டொய் (*doi*) ஏ.றஹ்மான் (இஸ்லாமியச் சட்டம்) ஷாரியாவின் கீழ் முஸ்லிம் அல்லாதோர்வரையறுக்கப்பட்ட த.ஹா. பிரசுராலயம் (1979) பக்கம் 76

40 ''மஹாபிரம்மன்''என அழைகக்கப்படும் தெய்வம்

41 ஒஸ்போர்ண் ஆர்தர் எழுதிய இந்து சமயப் பார்வையில் பௌத்தமும் கிறிஸ்தவமும் எனும் புத்தகத்தில் பகவத் கீதை ஓலைை, 12 றைடர் சூ கம்பனி, இலண்டன் (1959) பக்கம் 40

42 ''கே.எம.சென் இந்த மதம் உலகின் மிப் பழைய நம்பிக்கை'' பெலித்தன் புத்தகங்கள் (1963) பக்கம் 27

43 மேலே உள்ள அதே உஷாத்துணை

44 மனித உரிமைகளும் மதங்களும் அதி விசேட குறிப்பு 14, 6ம் பக்கத்தில் உள்ளது

[45] இலங்கையின் அரசியல் யாப்பின் உறுப்புரை 12 ன் விளக்கத்தை ஏற்பது நடைமுறைக்குப் பொருத்தமற்ற பொழிப்பினை ஏற்பதை விடச் சிறந்ததென சட்டத்துறை கூறுகிறது.

[46] (பிரமன் பிறப்பையும் சிவன் இறப்பையும் தீர்மானிப்பதைப் போன்று) மனிதனின் வெவ்வேறு பிறவியிலும் அவனது நடவடிக்கைகளை தீர்மானிப்பதும் ஆட்சி செய்வதும் கிருஷ்ணா எனும் கடவுளே

[47] பகவத் கீதை 15:7

[48] மனித உரிமைகளும் மதங்களும் அதி விசேட குறிப்பு 14 24 ம் பக்கத்தில் குறள் 452 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

[49] ''கிறின்லாந்தின் பனி மலைகள்'' விருந்து வில்லியம் மக்கோவன் உடன் ஒப்பிடுப் பார்க்கவும் ''மனிதன் மட்டும் இனியவனாக இல்லை - இலங்கையின் துன்பக் கதை :: பறார், ஸ்ரேட்டஸ் மற்றும் கிறௌக்ஸ்- நியூ யோர்க் (1992)

ISBN : 955 - 582 - 118 - 6

Printed By: Unie Arts (Pvt) Ltd.